| Headline | Health Ministry: Spread of HIV among drug addicts drops under harm reduction programme | | |
|---|---|---|---|
| MediaTitle | Tamil Nesan (Sunday) | | |
| Date | 05 Mar 2017 | Color | Black/white |
| Section | News | Circulation | 55,000 |
| Page No | 13 | Readership | 210,000 |
| Language | Tamil | ArticleSize | 211 cm² |
| Journalist | NULL | AdValue | RM 614 |
| Frequency | Daily | PR Value | RM 1,841 |



# போதைப் பொருள் பயனீட்டைக் குறைக்கும் திட்டம்



**பெக்கான், மார்ச் 5-**

அரசு சாரா அமைப்புகளின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்ட HARM REDUCTION எனும் போதைப் பொருள் பயனீட்டைக் குறைக்கும் திட்டத்தின் வாயிலாக ஊசிகளைப் பகிர்ந்து கொள்வதால் பரவும் எச்.ஐ.வி. தொற்றைக் குறைக்க முடிந்துள்ளது.

2006 ஆம் ஆண்டு இந்த திட்டம் அமல்படுத்தப்பட்டது. ஊசிகளைப் பகிர்ந்து கொள்வதன் வழி எச்.ஐ.வி. பாதிப்பு கண்டவர்களின் எண்ணிக்கை 2002 ஆம் ஆண்டு 74 விழுக்காடாக இருந்தது. இத்திட்டத்தின் அமலாக்கத்தின் வழி, 2015 ஆம் ஆண்டில் அது 16 விழுக்காடாக குறைந்தது என சுகாதாரத் துணை அமைச்சர் டத்தோ ஸ்ரீ டாக்டர் ஹில்மி யஹாயா தெரிவித்தார்.

தற்சமயம் மலாக்கா, நெகிரி செம்பிலான், பஹாங், கிளந்தான், ஜோகூர் ஆகிய மாநிலங்களிலுள்ள சுகாதார கிளினிக்குகளில் அமல்படுத்தப்படும் இத்திட்டத்தை விரிவுபடுத்தும் சாத்தியத்தையும் சுகாதார அமைச்சு ஆராய்ந்து வருகிறது என அவர் தெரிவித்தார்.

அதே வேளையில், 2015 ஆம் ஆண்டு வரையில் ஊசி மூலம் போதைப் பொருளைப் பயன்படுத்தும் 145 ஆயிரத்து 450 பேர் அல்லது 85 விழுக்காட்டினர் அந்தப் பாதிப்பைக் குறைப்பதற்கான திட்டத்தில் சேர பதிந்து கொண்டுள்ளதாக ஹில்மி கூறினார்.

அவர்களில் 46.2 விழுக்காட்டினர் மெத்ஹொடோன் சிகிச்சையைப் பெறவிருக்கின்றனர். ஹெரோயின் அல்லது மோர்ஃபின் போதைப் பொருள் எடுப்பதை நிறுத்திக் கொள்ள மருந்து வழங்கப்படும் முறை இதுவாகும்.

எச்.ஐ.வி. தொற்றைக் குறைக்கும் அதே வேளையில், இந்த சிகிச்சை முறை, மருத்துவ செலவினத்தைக் குறைக்க உதவுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. நாடு முழுவதும் இந்த சிகிச்சை முறையை விரிவுபடுத்தவிருக்கும் அரசாங்கத்தின் முயற்சிக்கு அரசு சார்பற்ற அமைப்புகள் உதவ முன்வர வேண்டும் என ஹில்மி கேட்டுக் கொண்டுள்ளார்.

Powered by: isentia